சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **102 / 2020**

பெயர்: காளியப்பபன் வா.சா.1 தேதி **13.11.2024**

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மாமுண்டி கவுண்டர் என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் இல்லை. அவருக்கு ஒரு மனைவி தான். வருவாய் துறையினர் மாமுண்டி கவுண்டருக்கு இரண்டு மனைவி என்பதால் நீதிமன்ற மூலம் பரிகாரம் கோரிக்கொள்ளும் படி கூறப்பட்டுள்ளது. நீதிமன்ற விதிக்கும் நிபந்தனைகளுக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் கட்டுப்பட தயாராகவுள்ளார்கள்.

4 முதல் 12 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் பெயர் மாமுண்டி கவுண்டர், எனது தாயார் பெயர் சிறும்பாயி. எனது பெற்றோர்களுக்கு 75 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது. நாள், தேதி தெரியாது. எனது பெற்றோர்களின் திருமணம் நடைபெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. எனது பெற்றோர்களுக்கு நான் உட்பட இரண்டு வாதிகள் வாரிசுகள். எனது தகப்பனார் குஞ்சம்மாள் என்பவரை எப்போது திருமணம் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி எனது தகப்பனாருக்கும் குஞ்சம்மாளுக்கும் பிறந்தவர்கள் தான் 5 முதல் 8 பிரதிவாதிகள் என்றாலும் ஒரு நல்லூசாமி என்பவரும் வாரிசாக இருந்து அவர் இறந்து போயிவிட்டார் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து சம்பந்தமாக அ.வ.எண். 1/1995 என வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது பாகபிரிவினை வழக்காகும். மேற்படி அ.வ.எண். 1/1995 வழக்கின் பிராதின் சான்று நகல் பி.வா.சா.ஆ-1. மேற்படி வழக்கில் எனது தகப்பனார் எதிர்வாதம் புரிந்திருந்தாரா என்றால் இல்லை. மேற்படி வழக்கானது நான் ஆஜராகததால் வழக்கானது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் மேற்படி வழக்கில் ஆஜராகி எனது தகப்பனார் மேற்படி குஞ்சம்மாளை முதலில் தாலி கட்டி திருமணம் செய்து கொண்டதாக கூறிருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எனது தகப்பனாருக்கு தார தோசம் இருந்ததால் முதலில் குஞ்சம்மாளை தாலி கட்டி திருமணம் செய்திருந்தார் என்றால் சரியல்ல. குஞ்சம்மாள் யார் என்றே எனக்கு தெரியாது. மேற்படி குஞ்சம்மாள் எனது தகப்பனாரின் மாமா மகள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ஒரே மேடையில் குஞ்சம்மாளையும் சிறும்பாயியும் திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை எனது தகப்பனார் மேற்படி வழக்கின் எதிர்வழக்குரையில் தெரிவித்திருந்தார் என்றாலும் நான் வழக்கிற்காக அவ்வாறு தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2007ம் ஆண்டு இறந்துபோனார். அதற்குமுன்னர் எனது தாயார் 2003ம் ஆண்டு இறந்துபோனார். மேற்படி குஞ்சம்மாள் என்பவர் தான் எனது தகப்பனாரின் முதல்

மனைவி என்றால் சரியல்ல. எனது தகப்பனார் முதலில் குஞ்சம்மாளை திருமணம் செய்ததால் நாங்கள் மேற்படி மாமுண்டி கவுண்டரின் சட்டப்பூர்வமான வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி மாமுண்டி கவுண்டருக்கு இவ்வழக்கில் 4 முதல் 12 பிரதிவாதிகள் தான் சட்டப்பூர்வமான வாரிசுகள் என்றால் சரியல்ல. ஆகையால் மாமுண்டி கவுண்டருக்கு வாரிசு சான்றிதழ் கோருவதற்கு எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. அதனால் எனது வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.